# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 06.08.2018 | 1) அ) தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படை தேவையான குடிநீர் விநியோகம் சீரான முறையில் புதிதாக இணைக்கப்பட்ட ஐந்து கிராம பஞ்சாயத்து மக்களுக்கும் வழங்க ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை (4டி) எண்.3 நாள் 22.10.2012ன் படி குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு ரூ. 282.44 கோடி நிதி ஒதுக்கப்பட்டு மேற்படி திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் இணைப்பு 60408 எண்ணங்கள் வழங்க திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீட்டின்படி அனைத்து பகுதி பொதுமக்களுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பது தவிர தற்போது புதிய குடிநீர் இணைப்பு பெற முன் வைப்பு தொகையாக வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கு ரூ 10,000/– மற்றும் சாலை பராமரிப்பு கட்டணங்கள், பாதாளச்சாக்கடை இணைப்பு வைப்புத்தொகை மற்றும் வீடுகள் இல்லாத Commercial இணைப்புகளுக்கு ரூ. 20,000/- மற்றும் சாலை பராமரிப்பு கட்டணம் பாதாளச்சாக்கடை இணைப்பு வைப்புத்தொகை செலுத்திட ஏதுவாக மாமன்றத்திற்கு உரிய பொருள் வைக்கப்பட்டு இதற்கான அரசிதழ் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.<br>மாநகராட்சியில் பாதாளச்சாக்கடை மற்றும் குடிநீர் திட்டங்களை முழுமையான திறனுக்கு செயல்படுத்தவும் அதன் பயன் அனைத்து பொதுமக்களுக்கும் உடனடியாக சென்று அடையவும், வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி மாநகராட்சி சாலைகள் வெட்டப்படுவதைத் தவிர்க்கவும் வேண்டி அனைத்து தரப்பு பொது மக்களும் பயனடையும் வகையில் மேற்படி முன்வைப்புத்தொகை மற்றும் இணைப்பு கட்டணத்தினை சம்பந்தப்பட்ட வீட்டின் சொத்து வரி விதிப்புடன் இணைத்து தவணை முறையில் அதிகப்பட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்து கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13277/2017/குவ1 நாள் 27.06.2018ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் ஏற்கனவே குடிநீர் இணைப்பு பெறுவதற்கான முன்வைப்புத்தொகை மற்றும் சாலை பராமரிப்பு கட்டணம் இணைப்பு கட்டணம் மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்பு வைப்புத்தொகையினை பொதுமக்களிடமிருந்து 12 தவணைகளில் பெற்று கொள்ள மாமன்றத் தீர்மான எண். 107 நாள் 03.07.2018ன் | 129)அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | படி அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி குடிநீர் இணைப்பு பெறுவதற்காக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களினை பரிசீலித்து முன்வைப்புத்தொகையுடன், சாலை பராமரிப்பு கட்டணம் இணைப்பு கட்டணம் மற்றும் பாதாளச்சாக்கடை இணைப்பு வைப்புத்தொகையினை சம்பந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து வசூல் செய்து கொள்ள ஏதுவாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. பாதாளச்சாக்கடை இணைப்பு வைப்புத்தொகையினை 8 தவணை தொகையாக பெறவும், மேற்படி தவணை தொகையினை சம்பந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து வசூல் செய்து கொள்ள ஏதுவாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br><br>ஆ) இதன் அடிப்படையில் ஏற்கனவே இம்மாநகராட்சிக்கான குடிநீர் உபவிதிகளுக்கு கீழ்க்கண்ட திருத்தங்கள் வெளியிட்டு அறிவிப்பு செய்திடவும் இதற்கான அறிவிக்கையினை அரசிதழில் வெளியிடவும் இதற்கான அனைத்து செலவினங்களுக்கும் உரிய ஒப்புதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>“தவணை முறையில் குடிநீர் இணைப்பு பெற விருப்பம் உள்ளவர்கள் குடிநீர் இணைப்பு பெறுவதற்கான வைப்புத்தொகையுடன், சாலை பராமரிப்பு கட்டணம் இணைப்புக் கட்டணம் மற்றும் பாதாளச்சாக்கடை இணைப்பு வைப்புத்தொகையினை 8 தவணை தொகையாக மாநகராட்சிக்கு செலுத்தலாம்” என ஏற்கனவே உள்ள உபவிதிகளுக்கு அடுத்ததாக குடிநீர் உபவிதிகளில் வரிசை எண்.33ல் கூடுதலாக சேர்ப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>அ) குடிநீர் இணைப்பு பெறுவதற்கான வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்களை 8 சம தவணைகளில் வசூல் செய்து கொள்ள அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி விபரத்தை அரசிதழில் வெளியிட்டு குடிநீர் உபவிதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>இ2/02373/18 | |

2) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ஊடீ1/2018(து4) நாள் 17.07.2018ல் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் சுமார் 50 மாணவர்கள் விளையாட்டு மாணவர்களுக்கான தங்கும் விடுதியில் தங்கி பல்வேறு விளையாட்டுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர் எனவும் தவிர இம்மாணவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதன் அடிப்படையிலேயே மாநிலத்தின் பல்வேறு பகுதியில் இருந்து திறமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வருவதாகவும் மேற்படி விளையாட்டு அரங்கத்தில் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்கனவே உள்ள நிலையில் ஒவ்வொரு விளையாட்டுக்கான பயிற்சி வழங்கும் பயிற்சியாளர்கள் இல்லாத நிலை உள்ளது எனவும் இதன்படி கீழ்க்கண்ட விளையாட்டுகளுக்கு தகுதி வாய்ந்த பயிற்சியாளரை மாநகராட்சி நிர்வாகம் நியமனம் செய்து இதன் மூலம் இம்மாணவர்கள் முழு பயனை அடைந்திட ஆவண செய்ய கோரியுள்ளார்.

| வ .எண் | பயிற்சிக்கு நியமனம் செய்யப்பட வேண்டிய பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Physical Trainer for Gymnasium | 1 |
| 2 | Swimming Coach | 1 |
| 3 | Badminton Coach | 1 |
| 4 | House keeping Professional | 1 |

இந்நிலையில் இது தொடர்பாக மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதல் கீழ்க்கண்ட விபரப்படியான பயிற்சியாளர்களை நியமனம் செய்திட 24.07.2018ம் நாளைய கடிதத்தின் வாயிலாக பரிந்துரை செய்துள்ளார்.

| வ .எண் | பயிற்சியின் விபரம் | பயிற்சிக்கு நியமனம் செய்ய பரிந்துரைக் கப்பட்ட பெயர் |
|---|---|---|
| 1 | Physical Trainer for Gymnasium | திரு. இயேசு சிலுவை |
| 2 | Swimming Coach | திரு.A. மணி கண்டன் |
| 3 | Badminton Coach | திரு.B . பிரவின் கண்ணா |
| 4 | House keeping Professional | திருமதி. மு. லட்சுமி |

இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் 2017–2018ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி விபரப்படியான பட்டியலில் செயல்திறனற்ற பணியாளர்களுக்கென நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நாளொன்றுக்கு ரூ. 304/– என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் மேற்படி நியமனம் செய்யப்படும் நபர்கள் பணிக்கு வருகை தந்துள்ள நாட்களுக்கான பணிச்சான்றினை (Duty Certificate) மற்றும் வருகை பதிவேட்டின் நகலினை மாவட்ட விளையாட்டு அலவலர்கள் அவர்களிடம் இருந்து பெற்று அதன் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் இவர்களுக்கு தகுதி உடைய தொகையினை கணக்கிட்டு மாநகராட்சி கல்வி நிதி கணக்கு எண். 2101010 (Wages and

130) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது.

Others) தலைப்பில் இருந்து இதற்கான தொகையினை மாவட்ட விளையாட்டு அலுவலர் தூத்துக்குடி அவர்களுக்கு வழங்கவும் இதற்கான செலவினங்களை மேற்கொள்ளவும் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு

1) மாமன்றம் உரிய ஒப்புதல் வழங்கலாம்.
2) மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களில் இவ்விளையாட்டு பயிற்சி பெற ஆர்வம் உள்ளவர்களுக்கு பயிற்சி வழங்கவும் குறிப்பாக விடுமுறை நாட்களான சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இம்மாணவர்களுக்கு சிறப்பான பயிற்சி வழங்கவிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தூத்துக்குடி அவர்களை கேட்டுக்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 3081/2018/சி1

3)தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களுக்கு அலுவலக உதவியாளராக பணிபுரியும் இருவருக்கு தலா இரண்டு செட் தவாலி சீருடைகள் வாங்கி வழங்கிட விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் தூத்துக்குடி நகரத்தில் இப்பணியினை மேற்கொள்ளும் நிறுவனம் இல்லை என்பதால் மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் இப்பணிகளை மேற்கொள்ளும் ஒரு சில நிறுவனங்கள் உள்ளதன்படி கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் திருச்சிராப்பள்ளியிலிருந்து பெறப்பட்டு அதன் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப் பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்தின் பெயர் | 4 செட் தவாலிச் விலைப்புள்ளி (GST) |
|---|---|---|
| 1 | திருவாளர் S. கஜபதி<br>தேவஸ்தான ஜரிகை<br>வேலைகள்<br>47 பெரிய சௌக், திருச்சி | ரூ. 36,288/– |
| 2 | திருவாளர் B,சுதர்சனா<br>ஜாரி வர்த்தர்<br>4 பேங்க்கர்ஸ் காலனி,<br>இரண்டாவது தெரு<br>திருச்சி. 17 | ரூ. 32,928/– |
| 3 | திரு.ஆர். விக்னேஷ்<br>தவாலி, ஜாரி, பிளாக் எண்.11<br>2வது தெரு குமரன் நகர்,<br>திருச்சி 17 | ரூ. 30,912/– |

131) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | மேற்படி பெறப்பட்ட விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரிசை எண் மூன்றில் தொவிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியான ரூ. 30,912/— குறைவாக உள்ளதால் இதனை ஏற்று இந்நிறுவனத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்ளவும் இதற்கான செலவினத்திற்கும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் முன் பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு—** ஒப்புதல் வழங்கலாம். சி1/3145/2018 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 06.08.2018